குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.

எஸ்.டி.சி.எண்.17/2020

2021 ம் ஆண்டு செப்டம்பர் 09-ஆம் நாள் வியாழன்கிழமை எதிரி தரப்பு சாட்சியாகிய 1-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.மதி. உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : ஜெயகுமார் வயது : 43

த/பெ : மாணிக்கம் தொழில் : எச்டிஎப்சி வங்கி மேலாளர்

ஊர் : சேலம் சமயம் : இந்து

வட்டம் : சேலம் ஜாதி : யாதவா

மாவட்டம் : சேலம்

முதல் விசாரணை

நான் எச்டிஎப்சி வங்கி சேலம் தேர்வீதி கிளையில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் வங்கியில் பேபிராணி க/பெ அண்ணாமலை வங்கி கணக்கு வைத்துள்ளார். அதன் எண். 15901000013526 ஆகும். 29-10-2018 மற்றும் 29-11-2018 ஆகிய தேதிகளில் பேபிராணி காசோலைகளுக்கு ஸ்டாப்பேமெண்ட் கொடுத்துள்ளார். மேற்படி காசோலைகள் பலவந்ததமாக தன்னிடம் இருந்து வாங்கப்பட்டது என்றும் குறிப்பு கொடுத்துள்ளார்.

31-10-2018 தேதியன்று தேதியிட்ட காசோலைகள் எண்கள்:-

| S.No. | Date of Cheque | Cheque No. | Party's Name to Whom Cheques issued | Amount of Cheque (Rs) |
|---|---|---|---|---|
| 1 | 31-10-2018 | 000002 | I. Perumal | 20,00,000 |
| 2 | 31-10-2018 | 000003 | G. Murugesan | 15,00,000 |
| 3 | 31-10-2018 | 000004 | G. Murugesan | 15,00,000 |
| 4 | 31-10-2018 | 000006 | G. Murugesan | 15,00,000 |
| 5 | 31-10-2018 | 000007 | A. Salamath | 3,00,000 |
| 6 | 31-10-2018 | 000008 | -- | 6,00,000 |
| 7 | 31-10-2018 | 000009 | I. Payas | 2,50,000 |
| 8 | 31-10-2018 | 000010 | L. Madesh | 4,00,000 |
| 9 | 31-10-2018 | 000011 | Arunachalam | 2,00,000 |
| 10 | 31-10-2018 | 000012 | B. Raja | 35,000 |
| 11 | 31-10-2018 | 000013 | -- | 45,000 |
| 12 | 31-10-2018 | 000014 | Jaffar | 3,50,000 |
| 13 | 31-10-2018 | 000015 | Baskar | 40,000 |
| 14 | 31-10-2018 | 000016 | A.Kumar | 4,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 31-10-2018 | 000017 | Venkatesh | 1,00,000 |
| 16 | 31-10-2018 | 000018 | Govindan | 3,00,000 |
| 17 | 31-10-2018 | 000019 | Venkatachalam | 3,00,000 |
| 18 | 31-10-2018 | 000020 | R.Srinivasan | 10,00,000 |

மற்றும் 03-12-2018 தேதியிட்ட காசோலைகள் எண்கள்:-

| S.No. | Date of Cheque | Cheque No. | Party's Name to Whom Cheques issued | Amount of Cheque (Rs) |
|---|---|---|---|---|
| 1 | 03-12-2018 | 000021 | G. Murugesan | 9,00,000 |
| 2 | 03-12-2018 | 000022 | P. Sidhaiyan | 9,00,000 |
| 3 | 03-12-2018 | 000023 | R. Srinivasan | 9,00,000 |
| 4 | 03-12-2018 | 000024 | Sivakumar | 9,00,000 |
| 5 | 03-12-2018 | 000025 | A. SalamathBasha | 9,00,000 |

ஆகியவைகளுக்கு மேற்படி குறிப்பை எதிரி கொடுத்துள்ளார்.

எதிரி எங்கள் வங்கிக்கு கொடுத்த 29-10-2018 மற்றும் 29-11-2018 தேதியிட்ட கடிதங்களின் நகல்கள் **எ.த.சா.ஆ. 1- வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**.

புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

காசோலையில் கண்டுள்ள தேதிகளின் போது எதிரியின் வங்கி கணக்கில் பணம் எவ்வளவு இருந்தது என்றால் ரூபாய் 5,611.52/- (ஐந்தாயிரத்து ஆறுநூற்றி பதினொரு ரூபாய் மற்றும் ஐம்பத்திரண்டு பைசா) இருந்தது. மேற்படி காசோலைகள் எதிரியின் காசோலைகள் தான் என்றால் சரிதான். மேற்படி காசோலைகள் திருப்பப்பட்ட தேதிகளில் எதிரியின் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் மேற்படி காசோலைகள் ஸ்டாப்பேமெண்ட் குறிப்பு எதிரியால் கொடுக்கப்பட்டு அதற்கு ரெகவரி சார்ஜஸ் 01-11-2018 அன்று வசூலிக்கப்பட்டுள்ளது. ஸ்டாப்பேமெண்ட் முதல் குறிப்பு 29-10-2018 அன்று கொடுக்கப்பட்டுள்ளது ஸ்டாப்பேமெண்ட் இரண்டாம் குறிப்பு 29-11-2018 அன்று கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி குறிப்புகள் கொடுக்கப்பட்ட வங்கி கணக்குகள் எதிரியின் பெயரில்தான் இருந்து வருகிறது.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது. மறு விசாரணை இல்லை. )

ஒம்/ எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.